# மெட்ரோ ரயிலில் இலவச, 'வைபை'

## பயணியர் சினிமா பார்த்து ரசிக்கலாம்

– நமது நிருபர் –

மெட்ரோ ரயிலில், இம்மாத இறுதிக்குள் இலவச, 'வைபை' வசதி அறிமுகம் செய்யப்பட உள்ளது. இதனால், பயணத்தின் போது, மொபைல் போன்களில் சினிமா பாடல்கள், கலை நிகழ்ச்சிகளை, பயணியர் இலவசமாக ரசிக்கலாம்.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயிலில், பயணியர் வருகையை அதிகரிக்க, பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.



இதையொட்டி, பயணியர், மெட்ரோ ரயில்களில், 'வைபை' வசதியில், சினிமா, பாடல்கள், பிரபலமான கலை நிகழ்ச்சிகளை இலவசமாக பார்க்கலாம். இதற்காக, பிரத்யேக செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இச்செயலியை பதிவிறக்கம் செய்து, விரும்பிய சினிமா பாடல்கள், நிகழ்ச்சிகளை பார்த்து ரசிக்கலாம்.

இது குறித்து, மெட்ரோ ரயில் அதிகாரி ஒருவர் கூறியதாவது:

மெட்ரோ ரயிலில், தினமும், 1.15 லட்சம் பயணியர் பயணம் செய்கின்றனர்.

விமான நிலையம் – டி.எம்.எஸ்., பரங்கிமலை – எழும்பூர் இடையே, மெட்ரோ ரயில்கள் மற்றும் நிலையங்களில், 'ஜியோ' மற்றும் 'ஏர்டெல்' மொபைல் போன் சிக்னல் வசதி செய்யப்பட்டுள்ளது.

டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை, எழும்பூர் – சென்ட்ரல் இடையே, மொபைல் போன் சிக்னல் வசதிகள் ஏற்படுத்தும் பணிகள், துரிதமாக நடந்து வருகின்றன.

இதையொட்டி, மெட்ரோ பயணியருக்கு, ரயில்களில் இலவச வைபை வசதி, இம்மாத இறுதிக்குள் வழங்க ஏற்பாடு நடக்கிறது.

வைபை ஏற்படுத்தப்பட்டதும், பயணியர், ரயில் பயணத்தின் போது, தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, ஆங்கில சினிமாக்கள், பாடல்கள், கலை நிகழ்ச்சிகளை, மொபைல் போன்களில் பார்த்து ரசிக்கும் வகையில், 'சுகர் பாக்ஸ்' என்ற புதிய செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, அதிகாரி கூறினார்.